# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 10.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1813/விசாரணை/E/2019**

திரு.J.முஹம்மத் அலி சித்திக் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை
ஆரணி சாலை, அடுக்கம்பாறை, வேலூர் மாவட்டம்-632 011. .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (Lockdown) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (10.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு.J.முஹம்மத் அலி சித்திக் அவர்களை கைபேசி வாயிலாக தொடர்புக் கொள்ள முயற்சித்தபோது அவர் அழைப்பை ஏற்கும் நிலையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.பிரபாகரன், பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர், அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, வேலூர் மாவட்டம் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 17.12.2018 தேதியிட்டு வேலூர், அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் பிரிவு 2(ஒ)-ல் கண்டவாறு ஆய்வு செய்ய தனக்கு நாள் மற்றும் நேரத்தை ஒதுக்கி தருமாறும், தான் கேட்கும் தகவல்களை வழங்க கோரியுள்ளதுடன், தன்னுடன் ஆய்வின்போது ஐந்து சமூக ஆர்வலர்கள்

கலந்துக் கொள்வார்கள் என்றும் தெரிவித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 03.01.2019 தேதியிட்ட கடிதத்தில் எது குறித்து ஆய்வு என்பதை தெளிவுபடுத்துமாறும் அல்லது தகவலாக கோரினால் தகவல் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார், எப்பொருள் சம்பந்தமாக ஆய்வு செய்வது என்பதை ஆய்வின்போது தெளிவாக கேட்கப்படும் என்றும், அப்போது தான் கோரிய தகவல்களை அளிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று தெரிவித்து மேல்முறையீட்டாளர் 08.01.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்திட, அவர் 23.02.2019 தேதியிட்ட கடிதத்தில் தேவைப்படும் தகவல்களை குறிப்பிட்டு கோருமாறு தெரிவித்துள்ளார். தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவல்களை தனக்கு வழங்கிட உத்தரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 27.02.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (03.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு.J.முஹம்மத் அலி சித்திக் அவர்களை கைபேசி வாயிலாக தொடர்புக் கொள்ள முயற்சித்தபோது அவர் அழைப்பை ஏற்கும் நிலையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

4. இது குறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் 17.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் உள்ள அனைத்து பிரிவுகளையும் ஆய்வு செய்ய அனுமதி வேண்டும் என்றும், தான் கோரும் தகவல்களை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளர் என்றும், மருத்துவமனையின் அனைத்து பிரிவுகளையும் ஆய்வு செய்ய வேண்டும் என்பது நோயாளிகள் வந்து செல்லும் இடம் என்பதால் எப்பொருள் சம்பந்தமாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும், எத்தகைய தகவல்கள் வேண்டுமென்றும் தெளிவுபடுத்தி கோருமாறு 03.01.2019 மற்றும் 23.02.2019 தேதியிட்ட கடிதங்களில் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார். மேலும், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்படி பொது அதிகார அமைப்பின் இருப்பில் உள்ள ஆவணங்களை மட்டுமே ஆய்வு செய்திடவும், தகவல்களை கோரி பெறவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதே அன்றி, கல்லூரி மற்றும் மருத்துவமனையின் செயல்பாட்டினை ஆய்வு செய்திட வழிவகை இல்லை என்றும் பொதுத் தகவல் அலுவலர் எடுத்துரைத்ததை இவ்வாணையம் ஏற்கிறது. மேல்முறையீட்டாளர் அவருக்கு தேவைப்படும் ஆவணங்களை பார்வையிட அனுமதி கோரினால், அவற்றை அவரது ஆய்விற்கு சமர்ப்பித்து, அவர் கோரும் நகல்களை வழங்குவதாக பொதுத் தகவல் அலுவலர் ஏற்பளிப்பு செய்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை இவ்வாணையம் பதிவு செய்தும், மேல்முறையீட்டாளருக்கு கூடுதலாக ஒரு வாய்ப்பளித்தும், விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது:-

> *இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அவர் இரண்டு நபர்களுடன் ஆய்வு மேற்கொள்ள அனுமதித்து, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 17.12.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனு தொடர்பாக ஆய்வு செய்ய விரும்பும் ஆவணங்களின் விபரங்களை பெற்றுக் கொண்டு, அது தொடர்பாக தகவல்கள் அடங்கிய கோப்புகள், பதிவேடுகள்,*

*கணினி நடவடிக்கைகள், ஆவணங்கள் உள்ளிட்டவற்றை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி (25 பக்கங்களுக்கு மிகாமல்) வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அடங்கிய CD அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 21 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறும், பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.*

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1813/விசாரணை/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை
ஆரணி சாலை, அடுக்கம்பாறை,
வேலூர் மாவட்டம்-632 011.

திரு.J.முஹம்மத் அலி சித்திக்
30, அமீர் தெரு,
கொண்டாபுரம், காவேரிப்பாக்கம்,
வேலூர் மாவட்டம்-632 508.

Copy to: File

RJ/PS 12.11.2020